7th March 1968]

MR. CHAIRMAN : Is the Hon. Minister anwerning ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் அங்கத்தினர் ரொம்பவும் ஆசைப்படுகிறார்கள். உறுப்பினர் சொல்வது போல் கட்டிக் கொடுப்பது சுலபமாக இருந்தால் இந்த அரசாங்கம் நாளைக்கே வீடுகளைக் கட்ட ஆரம்பித்துவிடும். இது அவ்வாறு செய்யக் கூடிய காரியமல்ல. ஏழை மக்கள் நல்ல வீடுகளில் வாழவேண்டும். எவ்வளவு தூரம் அவர்களுக்கு செய்ய வேண்டுமென்பதில் இந்த அரசாங்கம் அதிக அக்கறை கொண்டிருக்கிறது. சாத்திய கூறுனவைகளை நிறைவேற்ற வசதிகளைக் கொண்டு இந்த அரசாங்கம் செய்வதற்கு யோசனை செய்யும்.

திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் : முதலமைச்சர் அவர்களின் நிதியில் எவ்வளவு இருக்கிறது ? அதில் எவ்வளவு செலவாகியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தனியாகக் கேட்க வேண்டிய கேள்வி. அப்போது தான் தகவல் சொல்லப்படும்.

MR. CHAIRMAN : The Hon. Minister is in good form to-day.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I am always in good form (laughter).

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : எதிர்பாராத விதத்தில் ஏற்பட்ட தீ விபத்தால் உண்டாகும் இழப்புகளுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்ட தொகை போதாது என்று சேர்த்துக் கொடுக்கப்பட்டதற்கு நன்றி. இப்போது கொடுக்கிற தொகையை போதுமென்று இந்த அரசாங்கம் கருதுகிறதா ? அல்லது ஓரளவு இன்னும் இரட்டித்துக் கொடுக்க அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

MR. CHAIRMAN : கேள்வி எங்கெங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்கத்திற்கு எவ்வளவோ செய்யவேண்டுமென்ற ஆசையிருக்கிறது. பிரத்தியட்ச நிலைக்கு ஏற்ப செய்யப்படும்.

Distribution of sugar, rice and dhall

* 199 *Q.*—THIRUVALARGAL P. ETHIRAJ AND N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the procedure adopted by the Go vernment for ditributing essential foodstuffs like sugar, rice and dhall to all the villages—

சர்க்கரை, அரிசி, பருப்பு வினியோகம்.

திருவாளர்கள் பி. எத்திராஜ், என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு–வருவாய் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சர்க்கரை, அரிசி, பருப்பு போன்ற அத்யாவசியமான உணவுப் பொருள்களை எல்லா கிராமப் பகுதிகளிலும் சீராக வினியோகிக்க அரசு கையாளும் முறை என்ன—

THE HON. THIRU K. A. MATHIALAGAN : A system of informal rationing has been introduced in rural areas of this State. Fair Price Shops have been opened wherever necessary in deficit pockets, vulnerable areas and urban centres, where there is concentration of population. Rice is the main item distributed through these shops. Wheat, wheat products and sugar are also distributed to the public through these shops. Dhall is also

sold through these shops occasionally when stocks imported on Government account are available. But the Government do not undertake a systematic supply of dhalls and other pulses. There are also areas where no need is felt for distribution of rice through fair price shops, because of open market availability. In such areas wheat products, sugar and occasionally pulses are distributed through other dealers, generally provision merchants and grocery dealers.

திரு. பி. எத்திராஜ் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது கோதுமை தருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் கிராமங்களில் உற்பத்தியாகிற அரிசியையும், சர்க்கரையையும் நகரப் புறங்களில், குறிப்பாக பெரிய நகரங்களுக்கு, உள்ளவர்களுக்கு, கொடுத்துவிட்டு உற்பத்தி செய்கிற விவசாயிகளை அலட்சியப்படுத்துவது சமூக நீதியாகுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : விவசாயப் பெருமக்கள் தான் விவசாயம் செய்யாத மக்களுக்கு தங்கள் உழைப்பினால் விளைந்த தானிய மணிகளை வழங்குகிறார்கள். அதுதான் உண்மையான சமூக நீதி.

திரு. என். ஆர். தியாகராஜன் : மதுரை ஜில்லாவில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நெல் விளையாமல் குளங்கள் வரண்டு தாழ்ந்து போன பகுதிகளுக்கு அரசு, பருப்பு , சர்க்கரை போன்ற பொருள்களை கொடுக்க விசேஷ ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மதுரை மாவட்டத்தின் மீது இந்த அரசாங்கத்திற்குக் கோபம் எதுவும் இல்லை. எல்லா மாவட்டங்களிலும் அதுபோன்ற பகுதிகள் இருந்தால் அங்கங்கே நம்முடைய தானிய கையிருப்புக்குத் தக்கபடி அளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் இருக்கிற நிலைமையை அனுசரித்தும் நம்மிடத்தில் உள்ள இருப்பை பொருத்தும் ஏற்பாடு செய்யலாம். இப்போதுள்ள நிலையில் கோதுமை, சர்க்கரை இவற்றிற்கு டில்லியிடமிருந்து கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அவர்கள் கொடுக்கும் அளவில் "சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்" என்றபடி கொடுக்கப்படும்.

Rat menace to crops

* 200 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(*a*) whether roughly two lakhs of rats were killed recently on the outskirts of Valangaiman Panchayat Union, Thanjavur district ; and

(*b*) whether steps will be taken to kill rats in all parts of the Madras State in order to prevent the destruction to crops ?

பயிர்களை நாசம் செய்யும் எலிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) தஞ்சை ஜில்லா வலங்கைமான் பஞ்சாயத்து ஒன்றிப்பு எல்லையில் சுமார் 2 லட்சம் எலிகள் சமீபத்தில் கொல்லப்பட்டனவா ?

(இ) இதைப்போன்று தமிழகத்தில் எல்லாப் பகுதிகளிலும் பயிர்கள் நாசமாவதைத் தடுக்க எலிகளைக் கொல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) and (இ).

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, சமீபத்தில் சீனச் செய்தி ஒன்றைக் கேள்விப்பட்டேன். கோடிக்கணக்கான எலிகளையும்,